## இயல்:6 நேர்மை நிறைந்த தீர்ப்பு

## பயிற்சித்தாள்

வகுப்பு: 5 பெயர் : ____________________

**கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து, சரியான வினாக்களுக்கு விடையைத் தேர்வு செய்க.**

நீர்வளமும் நிலவளமும் உடைய தமிழ்நாட்டில் பண்டைக் காலத்திலிருந்தே பயிர்த்தொழில் சிறந்ததாகக் கருதப்பட்டது. முற்காலத் தமிழர் தொழுதுண்டு வாழ விரும்பினார் அல்லர். உழுதுண்டு வாழவே விரும்பினார்கள். “சீரைத் தேடின் ஏரைத் தேடு” என்றார் ஒரு புலவர். ஏர்த்தொழில் இனிது நடைபெறுவதற்கு மழை இன்றியமையாதது. தாய் முகம் காணாப் பிள்ளையும் மழை முகம் காணாப் பயிரும் செழிப்படைவதில்லை. ஆகவே, தமிழ்நாட்டார் வானத்திலே தவழும் மேகத்தையே நோக்கி வாழ்ந்தார்கள். உயர்ந்த ஓங்கிய மலைகளில் மேகம் தவழக் கண்டால் தமிழர் உள்ளம் தழைக்கும். கார்மேகத்தின் இடையே மின்னல் வீசக் கண்டால் அவர் உள்ளம் துள்ளி மகிழும்.

1. பண்டைக்காலத்திலேயே சிறந்ததாகக் கருதப்பட்ட தொழில் எது?

LIVEWORKSHEETS

அ ) பயிர்த்தொழில் ஆ ) நெசவுத்தொழில்

2. முற்காலத் தமிழர் எப்படி வாழ விரும்பினர்?

அ ) தொழுதுண்டு ஆ ) உழுதுண்டு

3. ஏர்த்தொழில் இனிது நடைபெற எது தேவை?

அ ) மழை ஆ ) மலை

4. தமிழர் உள்ளம் துள்ளி மகிழக் காரணம் என்ன?

அ ) கார்மேகத்தின் இடையே மின்னல் வீசக் கண்டால்

ஆ ) மழைமுகம் காணாப் பயிரைக் கண்டால்

LIVEWORKSHEETS